

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து அச்சரப்பாக்கம் மத்திய ஒன்றியத்திற்கு உட்பட்ட காட்டுக்கரணை ஊராட்சியில் பொறுப்பாளர் இராணிப்பேட்டை மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர் ஆர்.காந்தி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார். இதில் ஒருங்கிணைப்பாளர் மாநில சுற்றுசூழல் அணி துணைச் செயலாளர் ஆர். விநோத்காந்தி, ஒன்றியச் செயலாளர் கோகுல கண்ணன், மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய நகர பேரூர் நிர்வாகிகள் மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்ட மகளிரணி, தொண்டர்அணி அமைப்பாளர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் இ. பரந்தாமன் அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றியம் அகிலி ஊராட்சி செண்டிவாக்கம் கிராமத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமையில் அச்சுறுப்பாக்கம் வடக்கு ஒன்றியச் செயலாளர் தம்பு முன்னிலையில் வாக்காளர்களிடத்தில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், மேல்மலையனூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் நெடுஞ்செழியன், ஒன்றிய கவுன்சிலர் சிலம்பரசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

இந்தித் திணிப்பில்

‘U Turn’ அடிக்கும் த.வெ.க. அரசு!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, அக் 4-

“இந்தித் திணிப்பில் ‘U Turn’ அடிக்கும் த.வெ.க. அரசு” என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

இதுவரை ஒன்றிய அரசின் இந்தித் திணிப்பைத் தான் தமிழ்நாடு எதிர்கொண்டு வந்தது.

தற்போது, மாநில அரசே அந்தப் பணியைச் செய்வதுதான் அவர்கள் சொன்ன மாற்றம் போல.

எல்லாவற்றிலும், ஆழம் பார்த்துவிட்டு, எதிர்ப்பு கிளம்பியதும் ‘U Turn’ அடிக்கும் த.வெ.க. அரசின் மற்றுமொரு முயற்சியா இது?

வடமாநில influencerகளுக்காக ரீல்ஸ் ஆட்சி நடத்தும் த.வெ.க. அரசு இதன் ஆபத்தை உணர்ந்து, உடனடியாகத் தனது அணுகுமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும் என எச்சரிக்கிறேன்.

இருமொழிக் கொள்கை என்பது தமிழ்நாட்டின்



உயிர்க்கொள்கை. அதில் விளையாட வேண்டாம்!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

தாராபுரம் சட்டமன்ற இடைத்தேர்தலில் கழக வேட்பாளரை ஆதரித்து

காளிபாளையம் ஊராட்சியில் பி.எச்.பி.மனோஜ்பாண்டியன் எம்.எல்.ஏ. தெருமுனைப் பிரச்சாரம்!

தென்காசி தெற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் ஏற்பாடு!

தாராபுரம், அக். 4-

தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளராகப் போட்டியிடும் வழக்கறிஞர் சுகன்யா அவர்களை ஆதரித்து தென்காசி தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் வே.ஜெயபாலன் ஏற்பாட்டில் காளிபாளையம் ஊராட்சியில் தெருமுனைப் பிரச்சாரம் நடைபெற்றது.

இந்தப் பிரச்சாரத்தை ஆலங்குளம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் பி.எச்.பி.மனோஜ் பாண்டியன் துவக்கி வைத்து வீடு வீடாகச் சென்று உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்குமாறு பொதுமக்களை கேட்டுக்கொண்டார்.

ஒவ்வொரு வீடுகளிலும் உதயசூரியன் சின்னம் பொறிக்கப்பட்ட ஸ்டிக்கர் ஒட்டியும், துண்டுப் பிரசுரங்களை வழங்கியும் வாக்காளர்களிடம் வாக்குகள் சேகரித்தார்.




இந்த கிராமத்தைச் சேர்ந்த ஆண்களும் பெண்களும் தங்கள் வாக்குகளை உதயசூரியன் சின்னத்திற்குத் தான் அளிப்போம் என்று வாக்கு சேகரித்த கழக நிர்வாகிகளிடம் ஆர்வமுடன் கூறினார்கள். கழகத் தலைவர் அவர்களது ஆட்சியில் நிறைவேற்றப் பெற்ற திட்டங்களால் தான் தங்கள் வாழ்க்கை மிகச் சிறப்பாக இருந்தது என்பதை அவர்கள் நெகிழ்ச்சியுடன் எடுத்துக் கூறினார்கள்

இந்த நிகழ்ச்சியில் தென்காசி தொகுதி கழக சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் கலை கதிரவன், முன்னாள் சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினரும், கழக வர்த்தகர் அணி துணை செயலாளருமான முத்து செல்வி, கழக ஒன்றிய செயலாளர்கள் செல்லத்துரை, சிவன் பாண்டியன், சிவகுமார், சமுத்திர பாண்டியன், மணிகண்டனின் ஆலங்குளம் பேரூர் கழகச் செயலாளர் நெல்சன், முக்கூடல் பேரூர் கழக செயலாளர் ஆர்.லட்சுமணன், விருதுநகர் மாவட்ட மாணவரணி முன்னாள் துணை அமைப்பாளர் எஸ். எஸ்.கதிரவன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கே.கே.எஸ்.வாசன்

அக்டோபர் 3 (2013)



தனது இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

கும்பகோணம் நகரத்தில் வார்டு கிளைச் செயலாளர், நகர அவைத்தலைவர் ஆகிய பொறுப்புகள் வகித்தவர்.

குடந்தை நகர வீடு கட்டும் சங்கத்தில் துணைத்தலைவராக பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

இடைத்தேர்தலில் தி.மு.க.வுக்கு - வல்லரசு பார்வார்டு பிளாக் ஆதரவு!

பி.என்.அம்மாவாசி அறிவிப்பு!

மதுரை, அக். 4-

மதுரையில் 30.09.2026 அன்று நியூ ராஜா ரெஸ்ட் ஹவுஸில், அகில இந்திய வல்லரசு பார்வார்டு பிளாக் கட்சியின் நிறுவனர் தலைவர் பி.என்.அம்மாவாசி தலைமையில் ‘மாநில பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது. மாநில பொதுச்செயலாளர் பா.சந்திரசேகரன் தீர்மானங் களை வாசித்தார். மதுரை மாநகர் மாவட்ட தலைவர் பால முருகன் வரவேற்றார். மாநில செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டு சிறப்பித்த னர்.

இக்கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங் கள் வருமாறு:-

1.தமிழ்நாட்டில் நடை பெறும் மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தலில் தி.மு.க.வெற்றி பெற வல்லரசு பார்வார்டு பிளாக் ஆதரவு தெரிவித்து தீர் மானம் நிறைவேற்றப் பட்டது.

2. தேசிய தலைவர் பசும்பொன் முத்துராம லிங்க தேவர் ஜெயந்தி விழாவை இந்த ஆண்டு மிக பிரமாண்டமாக நடத்த வல்லரசு பார் வார்டு பிளாக் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

3. தென் மாவட்டங்



களின் மையப் பகுதியாக அமையப் பெற்ற மதுரை அருகே அமைந்துள்ள செக்காணூரணியில் புதியதாக கட்டப்பட்ட பேருந்து நிலையத்திற்கு கல்வி காவலர் பி.ஆர்.மூக்கையா தேவர் பெயர் சூட்ட வேண்டும் என தமிழ்நாடு அரசை வல்லரசு பார்வார்டு பிளாக் கேட்டுக் கொள்கிறது.

4. உசிலம்பட்டியில் அக்டோபர் 21ல் போர் முரசு வல்லரசு நினைவு நாளை சிறப்பாக கொண்டாட வேண்டுமென தீர் மானம் நிறைவேற்றப் பட்டது.

5. உசிலம்பட்டி 58 கிராம கால்வாய் திட்டத்திற்கு வல்லரசு பெயர் சூட்டப்பட வேண்டும் என்று தமிழ்நாடு அரசை கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் கலந்து கொண்ட மாநிலக்குழு உறுப்பினர்கள் கவிஞர் காஞ்சி பரமன், டாக்டர். தங்கப்பாண்டி, செல்லச்சாமி, செக்காணூரணி ரவி, ஏ.மணி கண்டன், மதுரை கனகு, மற்றும் பலர் கலந்து கொண்டனர் என்று அகில இந்திய வல்லரசு பார்வார்டு பிளாக் தலைவர் பி.என். அம்மாவாசி தெரிவித்துள்ளார்.

வடகிழக்குப் பருவமழை

அக்டோபர் மாதம் தொடங்கும்!

சென்னை, அக்.4-

வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில், அக்டோபர் 15லிருந்து 21 ஆம் தேதிக்குள் இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை தொடங்க வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு உள்ளிட்ட தென்னிந்திய மாநிலங்களில் வடகிழக்கு பருவமழை இயல்பை ஒட்டி இருக்கும் என்றும் தமிழ் நாட்டின் தென் மாவட்டங்களில் இயல்பை விட அதிகமாக மழை பதிவாக வாய்ப்பிருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. சென்னை உள்ளிட்ட மாவட்டங்களில் வடகிழக்கு பருவமழை இயல்பை ஒட்டி மழை பதிவாகும் என்றும், மத்திய உள் மாவட்டங்கள் மற்றும் வட மேற்கு மாவட்டங்களில் இயல்பை விட குறைவாக பதிவாகும் என்றும் வானிலை மையம் தெரிவித்துள்ளது. மேலும், நடப்பாண்டு ஜூன் முதல் செப்டம்பர் மாதம் வரை பெய்த, தென் மேற்கு பருவமழை இயல்பை விட, 13 சதவிகிதம் குறைவாக பெய்துள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தாராபுரம் சட்டமன்ற இடைதேர்தலை முன்னிட்டு கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் சார்பில் தாராபுரம், மரக்கடை புதுப்பள்ளி ஜும்மா தொழுகையில், பிரச்சாரம் நடைபெற்றது. இப்பிரச்சாரத்தில் வெற்றி வேட்பாளர் எஸ்.சுகன்யா அவர்கள் இஸ்லாமிய மக்களிடையே தீவிர வாக்குசேகரிப்பில் ஈடுபட்டார். உடன் கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான், உடுமலை சட்டமன்ற உறுப்பினர் ஜெயக்குமார், தாராபுரம் நகர கழகச் செயலாளர் முருகானந்தம், கமலக்கண்ணன், முனவர் ஜான், துபாய் கே.அன்வர் அலி, ஆஷிக் பாஷா, நிசார் அகமது, சையத் ஷாவலி, அல்தாப் உசேன், ஷாஜஹான், பரக்கத் அலி, முகமது ஜுபைர், ஜம்சித் அகமது, கிதியான் சுரேஷ், ஜாகிர் பாஷா, ஹாஜி மூஸா ஹக்கீம் சேட், தென்காசி ஹக்கீம், பாஷா, பதி, அப்பாஸ், சித்திக் அலி உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் பங்கேற்று பொதுமக்களிடம் வாக்குகளை சேகரித்தனர்.